**காத்தான்குடி நகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 19 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020ஆம் ஆண்டு ஜுன் 30 ஆந் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020ஆம் ஜுன் 19 ஆம் திகதியன்றும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றிலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய கணக்குகள் | | |
| (i) | நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள மின்சார சபை முற்பணங்கள் ரூபா 2,399,352 தொகை தொடர்பில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பான ஆவணங்கள், பதிவேடு மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவுமின்றி கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காத்தான்குடி நகரசபை மின்சாரசபையுடன் இணைந்திருந்த காலப்பகுதியில் மேற்கொண்ட கொடுப்பனவுகளின் அடிப்படையில் ரூ.2,399,352.49 மின்சாரசபைக்கு வழங்கப்பட்ட முற்பணமாக 1986ம் ஆண்டிலிருந்து காட்டப்படுகிறது |
| (ii) | ஒய்வு பெற்ற, வேலையை விட்டுச் சென்ற, மரணமடைந்த 4 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 38,876 கடன் மீதியை ஓய்வூதியத்திலிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடைவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக்கடன் சீர்செய்யப்படாமையால் இந்நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| | நிதிக்கூற்றுக்களில் கடன் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள செலவுக் கடன் வழங்குனர் ரூபா 6,642,879 ஐந்து வருடங்களுக்கு மேலாக இனங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கெடுப்பனவு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்விடயம் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரினதும் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 1.3.2 ஆவணச்சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 107,215,868 தொகை பெறுமதியான காணி கட்டிடங்களின் காணி உறுதிகள், நிலையான சொத்து பதிவேடுகள் போன்ற சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உறுதிகளற்ற காணிகளுக்கு உறுதியைப் பெற்றுக்கொள்ளநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவை தொடர்பாக தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | (i) நிதி ஒழுங்கு விதி 371 | பல்வேறு நபர்களுக்கு 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 வரை வழங்கப்பட்ட 32 வகையான முற்பணங்கள் சீர் செய்யப்பட்டு இருக்கவில்லை. | இம்முற்பணக் கொடுப்பனவை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. | ஏற்றுக்கொள்ளப் பட்டது |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெவ்வேறுபட்ட வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு ‘‘வற் பற்றுச்சீட்டு’’ (VAT Invoice) பெறப்பட்டிருக்கவில்லை. அத்துடன் செலுத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தப்படும் போது வற் பற்றுச்சீட்டு மீது மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,410,951 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,689,496 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ள வாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 19,875,000 | 19,196,489 | 14,520,979 | 4,675,449 | 18,409,850 | 18,359,223 | 14,662,263 | 3,696,960 |
| வாடகைகள் | 11,672,500 | 6,159,328 | 6,159,328 | - | 7,501,500 | 5,562,342 | 5,662,342 | -- |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,060,000 | 3,412,500 | 3,399,000 | 13,500 | 3,060,000 | 3,110,940 | 3,090,140 | 20,800 |
| ஏனைய வருமானம் | 31,153,500 | 28,044,403 | 16,924,628 | 11,119,775 | 26,389,500 | 25,487,741 | 25,487,741 | -- |
| மொத்தம் | **65,761,000** | **56,812,720** | **41,003,935** | **15,808,724** | **55,360,850** | **52,520,246** | **48,902,486** | **3,717,760** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ஆதன வரி நிலுவை ரூபா 4,084,020 தொகை மற்றும் மீலாயிவாண்டின் உண்டியல் படுத்தப்பட்ட ஆதன வரி ரூபா 16,929,108 தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதன வரி நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| (ஆ) | நகர சபைக்கு உரித்தான பழைய நூல் நிலையக் கட்டடத் தொகுதி, தொழில் பயிற்சி நிலயம், கலாச்சார அமைச்சின் உப அலுவலகம், கோட்டக்கல்வி அலுவலகம் என்பன செயற்படுவதற்கான அனுமதி நகர சபையினால் வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்நிறுவனங்களுடன் எதுவித குத்தகை ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை. | இந்நிறுவனங்களோடு ஒப்பந்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உப விதிகள்<br>நகர சபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 255 பிரகாரம்,நகர சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், நகர சபையினால் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் உப விதிகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திண்மக்கழிவு முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை செயற்படுத்த வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| (இ) | LGIP கடன் திட்டத்தின் கீழ் நகர சபை எல்லைக்குள் உள்ள வீதிகள் மற்றும் வடிகால்களினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக 09 வீத வருடாந்த வட்டியுடன் 10 வருடத்தில் செலுத்துவது என்ற அடிப்படையில் ரூபா 7,317,456 கடன் பெறப்பட்ட போதிலும் குறிப்பிட்ட வீதிகள் முறையாக சீர் செய்யப்பட்டு பேணப்படாமல் உள்ளன. | மீளமைக்கப்படாத வீதிகள் விரைவில் மீளமைக்கப்பட வேண்டும் | மீளமைக்கப்படாத வீதிகள் எதிர்வரும் காலங்களில் மீளமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்<br>---------------------------------------<br>சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.2.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடுகளில் குறிப்பிட்ட சொத்துக்களை பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| (ஆ) | திண்மக்கழிவு அகற்றல் செயற்திட்டத்தின் கீழ் கவசினா இயந்திரம் பொருத்தல் மற்றும் அது தொடர்பான நிர்மான நடவடிக்கைகள் 2019.06.10 இல் ஆரம்பிக்கப்பட்டு 2019.08.19 இல் முடிவுறுத்தப்டுவதற்கு | குறிப்பிட்ட செயற்திட்டமானது உரிய காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட வேண்டும். | அமைச்சரினால் 2020 ஆகஸ்ட்டினுள் வேலைத்திட்டத்தினை முடிவுறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

ரூபா 77,796,553 பெறுமதியான ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இருப்பினும் ஒப்பந்த நடவடிக்கைகள் 2019 திசெம்பர் 31 லரையிலும் முடிவுறுத்தப்பட்டிருக்காததுடன் ரூபா 29,920,986 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.2.2 தீர்கப்படாத அவதானிப்புகளும் விடை அளிக்கப்படாத ஐயவினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு அனுப்பப்படாமை<br>ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2/2011 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம், அமைய மற்றும் தற்காலிக ஊழியர்களின் பங்களிப்பு பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும்,2015,2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது நியமனம் செய்யப்பட்ட 77 ஊழியர்கள் தொடர்பான பங்களிப்பு அவர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டு பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட அனைத்து உறுப்பினர்களின் பங்களிப்புகளும் பொதுச் சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவேண்டும் | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |
| (ஆ) நூலகக் கட்டிடத்தை வாடகைக்குக் கொடுத்தல்<br>விலை மதிப்பீட்டுத் திணைக்களம் நூலகக் கட்டிடத்தின் மாதாந்த வாடகையை ரூபா 125,000 ஆக மதிப்பீடு செய்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு 04 ஆண்டு காலப்பகுதிக்காக ரூபா 5,000 மாதாந்த வாடகையில் தனியார் கல்வி நிறுவகமொன்றிற்கு இந்தக் கட்டிடத்தை சபை வாடகைக்கு வழங்கியிருந்தது. இதன் விளைவாக, சபையானது ரூபா 4,755,000 வாடகை வருமானத்தை இழந்திருந்தது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் படி நூலகக் கட்டிடத்தின் மாதாந்த வாடகையை ரூபா 125,000 ஆக அறவீடு செய்யப்படவேண்டும் | எதிர் காலத்தில் மேற்படி தவறு இடம்பெறா வண்ணம் நிவர்த்தி செய்யப்படும். |

### 3.3 பெறுகைகள்

### 3.3.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பொருட்கள் கொள்வனவிற்காக பெறுகைள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை | சபையின் நடவடிக்கைகலுக்காக உள்ளக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் | ஏற்றுக்கொள்ளப்பட்டது |